பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்10 வள்ளுவர் ஆண்டு2026 ஆவணி14 புதன்கிழமை (30 – 08 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 278

# 20 படையினருடன் 2 டோறாக்கள் முல்லைத்தீவுக் கடலில் சிதறடிப்பு!

கொழும்பு, ஒகஸ்ட் 30

வடகிழக்கு முல்லைத்தீவுக் கடலில் சுமார் இருபது கடற்படையினருடன் சென்ற கடற்படையினரின் அதிவேக "டோறா" படகுகள் இரண்டை நேற்று தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் சிதறடித்திருப்பதாக செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

வடபகுதி முகாம் ஒன்றை நோக்கி பொருள்களை ஏற்றிக் கொண்டு சென்ற சரக்குக் கப்பல் ஒன்றுக்கு பாதுகாப்பாகச் சென்ற இரண்டு [5 ஆம் பக்கம் பார்க்க]

# அளவெட்டியில் 10 படையினரும் நிலாவெளியில் 17 பொலீஸாரும் பலி

## இரு துணிகரத் தாக்குதல்கள்

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 30

திருகோணமலை நகரிலிருந்து ஆறு மைல் தொலைவில் உள்ள நிலாவெளி பொலீஸ் நிலையம் மீது நேற்று முன்தினம் இரவு பெருத்த எடுப்பில் விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதல்களில் மொத்தம் 17 பொலீஸார் உயிரிழந்தனர்; மேலும் 32 பொலீஸார் காயமுற்றனர்.

இதற்கிடையில் நேற்றுக்காலை 7-00 மணியளவில் அளவெட்டிப் பகுதியில் முன்னேற முயன்ற ஸ்ரீலங்காப் படைகளை வழிமறித்து விடுதலைப் புலிகள் நடத்திய — சமரில் ஒரு மணி நேர — அதிரடித் தாக்குதலில் பத்து இராணுவத்தினர் பலியானார்கள். அதிகாரி ஒருவர் உட்பட ஐந்து இராணுவத்தினர் படுகாயமுற்றனர்.

## காயமுற்ற பொலீஸாரை ஏற்றிச்சென்ற வாகனமும் கண்ணியில் சிதறியது

கொழும்பு, ஒக. 30

நிலாவெளி பொலீஸ் நிலையம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 9 பொலீஸார் பலியாகினர் என்றும்—

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த பொலீஸாரை ஏற்றிக்கொண்டு சென்ற பொலீஸ் டிரக் வண்டி புலிகளின் கண்ணிவெடியில் சிக்கிச் சிதறியது என்றும்—

அதனால் அந்த டிரக்கில் இருந்த எட்டுப் பொலீஸார் உயிரிழந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

இந்த இரு சம்பவங்களில் படுகாயமுற்ற 32 பொலீஸார் திருகோணமலை கடற்படை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

நிலாவெளி பொலீஸ் நிலையம் மீதான புலிகளின் பெரும் தாக்குதல் சுமார் இரண்டு மணி நேரம் நீடித்ததாக செய்தி ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டது.

இந்தத் தாக்குதலின்போது அந்தப் பொலீஸ் நிலையத்தில் 40 பொலீஸார் கடமையில் இருந்தனர் என்று தெரி (5 ஆம் பக்கம் பார்க்க]

## அளவெட்டி தாக்குதலில் ஆயுதங்கள் பலவும் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக. 30

அளவெட்டிப் பகுதியில் நேற்றுக் காலை முன்னேற முயன்ற படையினர் மீது புலிகள் நடத்திய தாக்குதலின் போது—

ஏ.கே. எல். எம் ஜி. ரகத் துப்பாக்கிகள் இரண்டு, ஏ.கே. ரகத் துப்பாக்கிகள் ஏழு, ஏராளமான ரவைக் கூடுகள் உட்பட பெருமளவு ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

இச்சம்பவத்தில் விடுதலைப் புலிகள் மூவர் களப்பலியானார்கள்.

பலத்த ஷெல் தாக்குதல்களை நடத்தியவாறு இருநூறு மீற்றர் தூரம்வரை முன்னேறிய படையினரே புலிகளின் தாக்குதல்களால் உயிர் மற்றும் ஆயுத இழப்புகளுடன் பின்வாங்கி ஓடியதாகத் தெரிவிக்கப்பட்டது.

புலிகளால் விரட்டியடிக்கப்பட்ட படையினர் பின்னர் மக்கள் குடியிருப்புகளை நோக்கி ஐம்பதுக்கும் அதிகமான ஷெல்களை ஏவினர்.

[உ-8]

## கட்டுவனிலும் 2 படையினர் பலி

யாழ்ப்பாணம், ஒக. 30

கட்டுவனில் நேற்று முன்தினம் நள்ளிரவு விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் இருவர் கொல்லப்பட்டனர்.

(ஓ-3)

## நேற்று 50 படையினர் பலி

கொழும்பு, ஒக. 30

நேற்று முன்தினம் நள்ளிரவு தொடக்கம் நேற்று நள்ளிரவு வரையான 24 மணி நேரத்துக்குள் பொலீஸார் உட்பட சுமார் ஐம்பது படையினரை அரசுத் தரப்பு இழந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நிலாவெளி பொலீஸ் நிலையத் தாக்குதலில் 17 பொலீஸாரும் —

அளவெட்டியில் பத்து இராணுவத்தினரும் —

கட்டுவனில் இரண்டு படையினரும் —

முல்லைத்தீவுக் கடலில் இருபது கடற்படையினருமாக மொத்தம் 49 இற்கும் அதிகமான படையினரை ஸ்ரீலங்கா அரசுத்தரப்பு கடந்த 24மணி நேரத்தில் இழந்துள்ளது.

## கிழக்கில் யுத்தம் தீவிரம்

லண்டன், ஒக. 30

கிழக்கில் இடைவிடாது தொடரும் யுத்தம் தற்போது தீவிரமடையத் தொடங்கியிருப்பதாக செய்தி ஏஜென்ஸிகள் தெரிவிக்கின்றன.

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டில் சுமார் நாற்பதாயிரம் துருப்புகளைக் குவித்து புலிகள் மீது பெரும் தாக்குதல் ஒன்றை நடத்த தாங்கள் தயாராகி வருவதாக ராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

பருவ மழை ஆரம்பிப்பதற்கு முன்னர் — அதாவது அடுத்த சில வாரங்களுக்குள் — இத்தகைய பாரிய தாக்குதல் தொடுக்கப்படக்கூடும் என நம்பப்படுகின்றது.

இதற்காக கிழக்கில் உள்ள ஒரு சில டசின் படை முகாம்களை மூடி, அங்கிருக்கும் படையினரை வடக்கே நகர்த்தி வடக்கில் படைக் குவிப்பை அரசு தீவிரப்படுத்தியிருக்கிறது.

அந்த வேளையில் —

கிழக்கில் யுத்தம் தீவிரமடைந்திருக்கின்றது.

கிழக்கில் தாக்குதலை முடுக்கி விடுவதன் மூலம் வடக்கில் அரசப் படைகளின் கவனத்தைச் சிதறச் செய்யும் (5 ஆம் பக்கம் பார்க்க)

### ஈழத் தமிழருக்கு ஆதரவாக

## 2 கோடி கையெழுத்துடன் வீரமணி ஐ.நாவுக்கு மனு

சென்னை, ஒக. 30

ஸ்ரீலங்காவில் தமிழர்கள் படுவதை செய்ய படுவதை ஆட்சேபித்து தமிழ் நாட்டிலிருந்து 2 கோடி கையெழுத்துகள் கொண்ட மனு ஒன்றை ஐ. நாவுக்கு அனுப்பும் நடவடிக்கையில் திராவிட கழகத்தின் தலைவர் இ. வீரமணி ஈடுபட்டுள்ளார்.

திராவிட கழகம் ஸ்ரீலங்கா அரசாங்கத்தைக் கண்டிக்கும் வீதிக் கூட்டங்களை தமிழ்நாடு முழுவதிலும் நடத்த ஆரம்பித்துள்ளது.

ஸ்ரீலங்கா இராணுவத்துக்கு இந்திய அரசாங்கம் பயிற்சி அளிக்கிறது எனக் கூறிய திரு. வீரமணி இந்தப் பயிற்சியை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கோரியுள்ளார்.

(ஓ-க)

யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
THE JAFFNA EDUCATION CENTRE
[சாந்தி சினிமா முன்பாக]
ஆண்டு: 6 – 10, O/L, A/L
SPOKEN ENGLISH
SHORT HAND TYPING
இரு மொழிகள் மூலமும் கற்பிக்கப்படுகின்றன
புதிய பிரிவுகள் ஆரம்பம்:- 1·9·95
★ மாணவர்களுக்கு விடுதி வசதியும் உண்டு
[38292] – நிர்வாகி



இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்–
வலி. வடக்குப் பிரிவு

## அலுவலக இடமாற்றம்

மல்லாகத்தில் இயங்கி வந்த இ. செ. சங்க வலி. வடக்குப் பிரிவு அலுவலகம் நீர்வேலியிலுள்ள வலி. கிழக்கு [தென்பகுதி] ப. நோ. கூ. சங்கத்திற்கு முன்னால் அமைந்துள்ள கட்டடத்தில் 28 - 08 - 1995 திங்கள் தொடக்கம் இயங்கி வருகிறது என்பதைத் தெரியப்படுத்துகிறோம்.

இ. செ. சங்க வலி. வடக்குப் பிரிவு
நிர்வாகக் குழு

[38287]



வியாபாரிமூலை இன்பர்சிட்டி
அருள்மிகு சித்திவிநாயகர் ஆலயம்
வருடாந்த மஹோற்சவம்

## தெய்வீக அருள் இசைப் பேருரை

30-08-95 புதன் தொடக்கம் 08-09-95 வரை
மாலை 6 மணிக்கு
"மகாபாரதம்"
நல்லை குருமணியின் பிரதம வாரிசு, கானசுதாவாரிதி
பிரம்மஸ்ரீ. சிவ. வை. நித்தியானந்தசர்மா
[ஆசிரியர், யாழ். கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்]
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வே. க. கந்தையா
ஆலய நிர்வாகப் பொறுப்பாளர்.

(38283)


## புலிகளின் குரல் வானொலியில்

30 – 08 – 1995
புதன் இரவு
★ 8-02 — குயிலோசை— நிகழ்ச்சியில் தமிழ்க்கவி எழுதிய "கடலோடு வாழ்வு"
★ 8-20 — வாத்தியகரனங்கள்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — நாடகம்- சிவசக்தி எழுதிய 'பனிகாளி

31 – 08 – 1995
வியாழன் காலை
★ 7-02 – மாவீரவணக்கம்
★ 7-15 — விடுதலை கீதங்கள்
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-45 — விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலியில்

புதன் மாலை
★ 5-01—சிந்தனைச்சிதறல்
★ 5-02 — எழுச்சிகீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — படப்பாடல்கள்
★ 5-30 — அறிவூற்று
★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
★ 6-02 — உங்கள் தெரிவு
★ 6-10 — செய்திகள்
★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
★ 6-20 — உங்கள் தெரிவு நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக. 30

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் சமூக விஞ்ஞானப் பிரிவு ஏற்பாடு செய்துள்ள கருத்தரங்கு ஒன்று நாளை வியாழக்கிழமை பி.ப. 3-30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை, மண்டப சமூக விஞ்ஞான பிரிவுத் தலைவர் என். சண்முகலிங்கத்தின் தலைமையில் நடைபெறும்.

கருத்தரங்கில் கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை "90 இன் பின் ஐரோப்பா - ஒரு பார்வை" என்ற பொருளில் கருத்துரையாற்றுவார். (எ)

# ஆண் போல் வேடமிட்டு வாழ்ந்த தமிழ்ப் பெண்!

## கொழும்பில் பொலீஸாரால் கைது

கொழும்பு, ஒக. 30

சுமார் 8 வருடங்களாக ஆண் போல் வேடமிட்டு கொழும்பில் வசித்து வந்த தமிழ்ப் பெண் ஒருவரை பொலீஸார் கைது செய்துள்ளனர்.

இவர் புறக்கோட்டையில் உள்ள சிகை அலங்கரிப்பு நிலையம் ஒன்றில் சிகை அலங்கரிப்பாளராகத் தொழில் புரிந்து வந்தார்.

அங்கு வைத்தே அவரைக் கைது செய்ததாக கொழும்பு பிரதிப் பொலீஸ்மா அதிபர் எச். எம். ஜீ. டி. கொட்டகதெனிய தெரிவித்தார்.

இப்பெண் மட்டக்களப்பில் இருந்து கொழும்புக்கு வந்து மாறுவேடத்தில் தங்கியிருந்தார் என்றும்—

இவர் விடுதலைப் புலிகளின் உளவாளியாக இருக்கலாம் என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

எனினும் கொழும்பில் பெண்ணாக வாழவும், வேலை பார்க்கவும் முடியாமல் இருந்ததாலேயே தான் ஆணாக வேடம் போட்டிருந்ததாக அப்பெண் பொலீஸாரிடம் தெரிவித்தார்.

அப்பெண் பெண்களுக்குரிய அங்க அமைப்புகளை தோற்றத்தில் கொண்டிராததாலேயே இவ்வளவு காலமும் ஆணாக அவரால் வேடம் போட முடிந்தது என பொலீஸார் தெரிவித்தனர்.

அவர் எவரால் கொழும்பிற்கு அழைத்து வரப்பட்டார், அதன் நோக்கம் என்ன என்பது பற்றி பொலீஸார் புலன் விசாரணை நடத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

# அமைச்சரை நீக்குமாறு எம். பிக்கள் கோருவர்

கொழும்பு, ஒக. 30

அரசாங்கத்தின் அதிகாரப் பரவலாக்கல் ஆலோசனைகளைப் பொறுத்து அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பை அமைச்சர் ரத்னசிறி விக்ரமநாயக்க மீறினார். ஆகவே அவரைப் பதவியிலிருந்து நீக்க வேண்டும்.

சில அமைச்சர்கள் உட்பட பொ. ஐ. மு. எம்.பிக்கள் சிலர் ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கவை விரைவில் சந்தித்து மேற்கண்ட கோரிக்கையை முன்வைக்க உள்ளனர் என்று "ஐலண்ட்" வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது. [இ-க]


## மனையியல் வகுப்புக்கள்

✶ தையல் பூவேலை ✶ கேக்ஐசிங்
✶ சமையற்கலை ★ கைப்பணி
✶ கூந்தல் அலங்காரம்

நல்லூர் உற்சவ காலத்தால் இடை நிறுத்தி வைக்கப்பட்ட வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புதிய பிரிவு
ஆரம்பம் 16-9-95
காலை 9.00 மணி
முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்

ஜைசன் மனையியற் கல்வியகம்

370, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (38290)



## HARY'S INSTITUTE

Kondavil East, Kondavil.

SPOKEN ENGLISH
with
GRAMMAR

புதிய பிரிவு ஆரம்பம்
04-09-1995 திங்கள் மாலை 5.00 p.m. 6.00 p.m.
திங்கள் / வெள்ளி )- 5.00 p.m. – 6.00 p.m.

Lectures by
MR. M. A. HARI

அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

Director.

(38289)



உ
கோண்டாவில் மேற்கு, கந்தர் வளவு
ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார் கோவில்
(காளி கோவில்)

## வருடாந்த மஹோற்சவம் - 1995

மேற்படி ஆலய வருடாந்த மஹோற்சவம்
இன்று 30 – 08 – 1995 புதன்கிழமை
காலை 11-00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி
08 — 09 — 1995 வெள்ளிக்கிழமை தீர்த்த உற்சவத்துடன் நிறைவு பெறும்

| | | | |
|---|---|---|---|
| 30 — 08 — 1995 | புதன்கிழமை | கொடியேற்றம் | பகல் 11- 00 மணி |
| 06 — 09 — 1995 | புதன்கிழமை | சித்திரத்தேர் வெள்ளோட்டம் | மாலை 4- 00 மணி |
| 06 — 09 — 1995 | | சப்பறம் | மாலை 6- 00 மணி |
| 07 — 09 — 1995 | வியாழக்கிழமை | தேர்த்திருவிழா | காலை 9- 00 மணி |
| 08 — 09 — 1995 | வெள்ளிக்கிழமை | தீர்த்தஉற்சவம் | காலை 10- 00 மணி |

தினமும் மாலை 7- 00 மணி முதல் 8- 00 மணி வரை
மகாபாரத தொடர் சொற்பொழிவு
திரு. த. சிவகுமாரன்
(அமைப்பாளர் காரைநகர் கம்பன் கழகம், ஆசிரியர் யாழ். இந்துக்கல்லூரி)
அவர்களால் நிகழ்த்தப்படும்

அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
ஆலய பரிபாலன சபை.

விளம்பர அன்பளிப்பு:
நிரு ரியூசன் சென்ரர் கோண்டாவில்
[கி-2128]



## உடுவில் மகளிர் கல்லூரி

உடுவில் மகளிர் கல்லூரி இரண்டாம் தவணைப் பரீட்சைகள் எதிர்வரும் 1 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும்.

ஆவணி 24 ஆம் திகதி தொடக்கம் சகல வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

C. V. Selliah
அதிபர்

[சி/2130]

## வவுனியாவில் 50 தமிழர் கைது

கொழும்பு, ஒக.30

கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியா சுந்தரபுரம் இந்து விடுதியைச் சுற்றிவளைத்த படையினர் 10பெண்கள் உட்பட சுமார் 50 தமிழரை விசாரணைக்காக அழைத்துச் சென்றனர்.

இவர்களுள், யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த நவரட்ணம் என்பவர் மேலதிக விசாரணைகளுக்காக கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். (எ)

# தீர்வுத் திட்டத்தை சட்ட வரைவு வடிவில் வெளியிட ரணில் கோரிக்கை

கொழும்பு, ஒக 30

''அரசாங்கம் அதன் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளை சட்ட வரைவு வடிவத்தில் வெளியிட வேண்டும்.''

எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்ரமசிங்க கடந்த 27ஆம் திகதி நடைபெற்ற கொழும்பு மாவட்ட ஐ.தே.கவின் வருடாந்தக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய போது இவ்வாறு கூறினார்.

சட்ட வரைவு வடிவத்தில் தீர்வுத்திட்டம் வெளியானால் மட்டுமே ஒரு பொறுப்பான கட்சி என்ற முறையில் தீர்வுத் திட்டம் பற்றி ஐ.தே.க. அதன் நிலைப்பாட்டை எடுக்க முடியும் என்றும் அவர் கூறினார். (இ-ச)

## பொலிஸ் அதிகாரியும் காயம்

யாழ்ப்பாணம், ஒக. 30

கடந்த 19 ஆம் திகதி மட்டக்களப்பு நகர்ப்புற இராணுவ 8ஆவது பட்டாலியன் தலைமையகம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில், மட்டக்களப்பு பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் பாலசூரியவும் காயமடைந்துள்ளார். (எ)


FOR SCHOOL SOCIETY AND THE ASSOCIATION
P.O.B.A. S.P.C.I.
PRO VERITATE ET JUSTITIA

# பற்றிஷன் தொழில் பயிற்சி நிறுவனங்கள்

# PATRICIAN INSTITUTES

## தொழில் நுட்ப பயிற்சி நெறிகள் புதிய பிரிவுகள்

வார இறுதி வகுப்புகள்: 02 - 09 - 1995 சனிக்கிழமையும்

வார நாள் வகுப்புகள்: 04 - 09 - 1995 திங்கட்கிழமையும் ஆரம்பமாகின்றன.

**01.** கணனி வகுப்புகள்......... (Computer Programming)

பெற்றோர்களே! மாணவர்களே!! உத்தியோகத்தர்களே!!!

★ உங்களை தற்போதைய கணனி உலகிற்கு ஏற்றவாறு தயார் படுத்திக் கொண்டீர்களா?
★ உங்கள் அல்லது உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பற்றிய கவலையா?
★ உங்கள் தொழில் முன்னேற்றம் பற்றிய கவலையா? வேண்டாம் கவலை, இருக்கிறதே என்றும் வளர்ந்து கொண்டிருக்கும் கணனித்துறை
★ நான்கு மாதத்தில் நான்கு தானத்தில் சம்பளம்!
★ உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் மிகச் சுலபமாக பெறக்கூடிய மதிப்புடன் கூடிய தொழில்கள்!!

காலத்தை வீணாக்காதீர்!

இன்றே எம் கணணித்துறையில் இணைந்து உங்களை முன்னேற்றிக் கொள்ளுங்கள்

இன்னும் சந்தேகமா???

உங்கள் தெளிவுக்கும் விவரங்களுக்கும் எங்களை நாடுங்கள்

★ வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் பயிற்சி பெற்ற விரிவுரையாளர்களால் நடத்தப்படுகிறது.

Equipment Used: Laser XT/2, XT/3, 386, and Bit Com Computers (I B M Compatibles)

(கூடிய நேரச் செய்முறைப் பயிற்சிகள்)

**02. CIVIL DRAUGHTSMANSHIP**

இதில் உள்ளடக்கப்பட்ட பாடங்கள்:

(I) Draughtsmanship
(II) Engineering Drawing
(III) Building Construction
(IV) Civil Engineering Materials
(V) Building Quantity

★ QUALIFICATION: G.C.E. (O/L)
★ DURATION: 6 MONTHS

**03. CITY AND GUILDS LONDON EXAMINATION (YEAR 95/96)**

★ Quantity Surveying: (Part I & II)
★ Lectures By: Mr. S. Ruthiralingam (Eng.)

(இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

**04. SPECIAL ENGLISH COURSE**

இலக்கணத்துடன் சேர்ந்த உரையாடற் பயிற்சிகள்

**05. SHORT - HAND AND TYPING** (ENGLISH)

சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் (ஆங்கிலம்)

**06. BOOK-KEEPING AND ACCOUNTS**

லண்டன் I A B உட்பட சகல பரீட்சைகளுக்கும் உகந்த வகையில் தமிழ் விளக்கங்களுடன் வகுப்புகள் நடைபெறும்.

**07. GENERAL MOTOR MECHANISM -**

மோட்டார் வாகனங்கள் திருத்துதல்:

மோட்டார் சைக்கிள், நீர் இறைக்கும் பம்பி, ஜெனரேற்றர், கார், லொறி எஞ்ஜின்கள் (பெற்றோல் டீசல் யாவும்)

★ DURATION; 6 MONTHS

வாகன ஓட்டுனர்களின் நன்மை கருதி!

வாகன ஓட்டுனர்களே!

உங்கள் மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் எஞ்ஜின்கள் அத்துடன் ஜெனரேற்றர் எஞ்ஜின்களையும் அறிந்து கொள்ளுங்கள்.

★ DURATION: 2 MONTHS

★ Lectures By: Mr. A. S. Gunaseelan (Auto mobile Engineer)

**08. ELECTRICAL WIRING -**

மின்சார இணைப்பு:

(I) அடிப்படை மின்னியல்
(II) வீடுகளுக்கான மின்னிணைப்பு (Single Phase)
(III) தொழிற்சாலை மின்னிணைப்பு (Three Phase)
(IV) SOLAR POWER SYSTEM WIRING

★ DURATION: 3 MONTHS

**09. MOTOR REWINDING -**

மோட்டர் ரீவைண்டிங்:

(I) அடிப்படை மின்னியல்
(II) காந்தப்புலமும், வரிச்சுருளும்
(III) நேரோட்ட மின்னியந்திரங்கள்
(IV) ஆடலோட்ட மின்னியந்திரங்கள் (மோட்டர், மின் பிறப்பாக்கிகள், மின்விசிறி, மின் மாற்றிகள்)
(V) THREE PHASE

★ DURATION: 4 MONTHS

**10. GENERAL ELECTRICIAN -**

ஜெனரல் எலக்ரீஷன்:

(I) அடிப்படை மின்னியல்
(II) அடிப்படை இலத்திரனியல்
(III) காந்தப்புலமும், வரிச்சுருள்களும்
(IV) ஆடலோட்ட மின்னியந்திரங்கள் (மின் மாற்றிகள், மின் பிறப்பாக்கிகள், மோட்டர்கள்)
(V) நேரோட்ட மின்னியந்திரங்கள்
(Vi) வீட்டு மின்சுற்று, வாகனங்களுக்கான மின்சுற்று
(VII) Three Phase, மின்பிறப்பாக்கம், ஊடுகடத்தல், விநியோகம்
(VIII) குளிர்சாதனங்கள், காற்று சீராக்கிகளுக்கான மின்னிணைப்பு
(IX) SOLAR POWER SYSTEM
(X) மற்றும் எல்லாவிதமான மின் உபகரணங்களை, பழுதுபார்த்தலும், இயக்குதலும், பராமரித்தலும்

★ DURATION: 6 MONTHS

குறிப்புகள்:-

★ பயிற்சிக் கட்டணங்களை தவணை அடிப்படையில் செலுத்தலாம்.
★ வன்செயல்களால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் போதிய ஆதாரம் காட்டி பங்குக் குருவானவரின் (Parish Priest) சிபார்சின் பேரில் கட்டணத்தில் சலுகையைப் பெற்றுக் கொள்ளலாம்.
★ மேற்படி பயிற்சி நெறிகளைப் பயில விரும்புவோர் பாடநெறிகளுக்கான கட்டண விவரம், பாடத்திட்டங்களை அலுவலகத்தில் பெற்று உடன் தங்களைப் பதிவுசெய்து கொள்ளவும்.

எமது நிறுவனம் இல. 2, பழைய பூங்கா வீதியிலும் ஆரம்பிக்கப்படவுள்ளது என்பதை அன்புடன் அறியத்தருகின்றோம்.

மேற்படி பயிற்சிநெறிகள், மேற்படி நிலையத்திலும் நடத்தப்படும்.

மேலதிக விவரங்களுக்கு:

REGISTRAR,
PATRICIAN INSTITUTE OF HIGHER STUDIES.
59, ST. PATRICK'S ROAD, JAFFNA.

(இ-2106)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

Yamaha Mate 50 பச்சை நிறமுடைய மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: பாலசிங்கம் சிறீஸ்கந்தன் சிவன் கோயிலடி, வட்டு. வடக்கு வட்டுக்கோட்டை. (38278,

### தேவை

ஆங்கிலம், தமிழ் தட்டெழுத்து கற்பிப்பதற்கு அனுபவமுள்ள ஆசிரியைகள் தேவை. தமது சொந்தக் கையெழுத்தில் 5-9-95இற்கு முன் விண்ணப்பிக்கவும். Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (8714)

வெற்று ஜாம் (Jam) போத்தல்கள், பிளாஸ்டிக் மூடியுடன் கூடிய விவா, ஹோர்லிக்ஸ் போத்தல்கள் எம்மால் கொள்வனவு செய்யப்படுகிறது. ரேஸ்ட் லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டெட், 14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி-1967)

புதிய, பழைய பாவனைக்கு உதவாத தமிழ், ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள் தேவை. தொடர்பு: R. மகாலிங்கம், இல. 8/1, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். [38247]

### தவறிவிட்டது

குமாரவேலு பத்மநாதன் ஆகிய எனது பஸ்/மோட்டார் சைக்கிள் லைசென்ஸ் யாழ்ப்பாணத்துக்கும், மானிப்பாய்க்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மானிப்பாய் சந்தை பத்மநாதன் கடையில் ஒப்படைக்குமாறு கேட்கிறேன். [38276]

21-8-95 அன்று நல்லூர் கோயில், கச்சேரியடி, பெரிய கடை ஆகிய பகுதிகளுக்கு இடையில் தாலிக்கொடி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்களோ, தகவல் அறிந்தவர்களோ தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசத்துடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். மா. ஆனந்தகுமாரசாமி, இல. 36/1B, காட்டுக் கந்தோர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [38279]

### உடன் விற்பனைக்கு

சாவகச்சேரி டச்றோட், முதலாம் கட்டை ஒழுங்கையில் ஐந்து பரப்புக் காணி மா, தென்னை மரங்களுடனும் நல்ல தண்ணீர் கிணற்றுடனும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: எஸ். கந்தசாமி, சங்கத்தரணி சாவகச்சேரி. [38265]

### SPECIAL ANTENNA

To view Rupavahini, Madras, Programmes Fixing Special T. V. Antenna, Repairing Antennas, Radios T. V. Decks, Clocks and Watches. Venus Dilka Watch and Radio Works, 284, Staney Road (Ariyakulam Junction), Jaffna. Branch: Kandy Road Chavakachcheri. [C-1976]

### விற்பனைக்கு

வாண்டு மாஸ்ரருக்கு பயன்படுத்தும் முன் ரயர்கள் மூன்று விற்பனைக்குண்டு.

LANKA TYRE
Size: 5-00-12

தொடர்பு:
**உதயன் பணிமனை,**
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

### திருத்தம்

நேற்றைய உதயன் 4ஆம் பக்கத்தில் வெளியான
**"நித்தியகல்யாணி"**
விளம்பரத்தில் —
நித்திய கல்யாணி பயிற்சி நிலையத்தின் விலாசத்தின் அடியில் இருந்த குறிப்பு (பலாலி வீதி தபாற்பெட்டிச் சந்திக்கு அருகில்) என்பதே சரியாகும்.

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 26 | 25 |
| 08 | 08 |
| 1947 | 1990 |

**அமரர் ஏரம்பு துரைராசா**
(கிராமசேவையாளர், மண்கும்பான்)

ஆண்டு ஐந்து சென்றாலும் அன்பு மகன் தனை தேடி வருவாரென்று அம்மா தினம் வாசலிலே காக்கின்றாவே. தேன் கூடு கலைந்ததண்ணா; எங்களுக்கு தென்றல் புயலானதண்ணா; என் கண்ணில் நீர் வழிந்தால் உங்கள் இதயம் துடிக்கும் அண்ணா. அண்ணா நீங்கள் இல்லாது எம் வீடு சிரிக்காது.

உங்கள் பிரிவால் துயருறும்;
— குடும்பத்தினர்,

4ஆம் வட்டாரம்,
மண்கும்பான். [38268]

உ
## திருமண அழைப்பு

மங்களகரமான யுவவருடம் ஆவணிமாதம் 16ஆம் நாள் [01-09-95] வெள்ளிக்கிழமை அதிகாலை 5-30மணி முதல் 7-30மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில்

| சிரஞ்சீவி | சௌபாக்கியவதி |
|---|---|
| **வேனிலான்** | **சிவலக்சுமி** |
| அவர்களுக்கு | அவர்களை |

திருமாங்கல்யதாரணம் செய்ய பெரியோர் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் கொழும்பு ஸ்ரீமயூராபதி தேவஸ்தானத்தின் சுப்பம்மாள் மண்டபத்தில் நடைபெறும் திருமணவைபவத்தில் வருகைதந்து சிறப்பித்து புதுமணத் தம்பதிகளை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்,

(தனிப்பட்ட முறையில் அழைப்பிதழ் அனுப்ப முடியாமையினால் தயவு செய்து இவ் அழைப்பை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்)

திருமதி தங்கம்மா வைரவர்பிள்ளை
நிஹால் சில்வா மாவத்தை.
கிருலப்பனை கொழும்பு-[illegible]

திரு. திருமதி கந்தையா
மானிப்பாய் வீதி,
மருதனார்மடம் உடுவில்.

இரு வீட்டார் அழைப்பு

(38052)

உ
கொக்குவில் மேற்கு
அருள்மிகு
## மஞ்சவனப்பதி முருகன் ஆலய வருடாந்த மகோற்சவம்
யுவ ஆண்டு - ( 1995 )
காலம்: 30-08-1995 = 08-09-1995

கொடியேற்றம்:
30-08-95 இன்று நண்பகல் 12-00 மணி
தண்டாயுதபாணி உற்சவம்:
05-09-95 செவ்வாய்க்கிழமை பி.ப.2-00மணி
சப்பற உற்சவம்:
06-09-95 புதன்கிழமை மாலை 6-30 மணி
தேர்த்திருவிழா
07-09-95 வியாழக்கிழமை காலை 9-30மணி
தீர்த்தோற்சவம்:
08-09-95 வெள்ளிக்கிழமை காலை10-00மணி
பூங்காவன உற்சவம்:
09-09-95 சனிக்கிழமை மாலை 4-00 மணி
12ஆவது தின அலங்கார உற்சவம்;
10-09-95 ஞாயிற்றுக்கிழமை மாலை 4-00மணி

ஆலய நித்திய பூசை:
சிவஸ்ரீ. பா. சண்முகராசக் குருக்கள்
மகோற்சவ குரு;
வேதாகம கிரியாரத்தினம்
சோ. சந்திரகாந்தக்குருக்கள்
(சந்திரசேகரப் பிள்ளையார் தேவஸ்தானம், சுன்னாகம்)

ஆலய சேவையில்
நிர்வாக சபையினர்.

மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

விளம்பர அன்பளிப்பு,
**மஞ்சவனப்பதி இளைஞர்கள்**
[38272]

அழகிய வேலைப்பாடுடன் கூடிய 40 அடி நீள
**மணப்பந்தல், கதிரைகளுக்கும் மற்றும் வர்ண புகைப்படம், வீடியோ பிடித்திடவும்**

## ராஜன் வீடியோ
மூவிஸ் சென்ரர்

தொடர்புக்கு:
**ராஜன் சைக்கிள் வேர்க்ஸ்**
பருத்தித்துறை.
(சி-2091)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 31 | 31 |
| 11 | 07 |
| 1927 | 1995 |

அமரர்
**சின்னத்தம்பி கோபாலகிருஷ்ணபிள்ளை**

அன்பின் சிகரமே! ஆருயிர்த் தந்தையே!
இன்னல்கள் பலகடந்து ஈன்றவன் போல் பாசமுடன்
உலகமிது என்றுணர்த்தி ஊரறிய வாழவைத்து
பாசமதைக் காட்டிவிட்டு பரமன்தான் சேர்ந்தாயே.
ஈசன் பாதத்தில் இன்பமுடனே இணைந்து,
ஆத்மா சாந்திபெற அனைவரும் வாழ்த்துவமே.

என்றும் உங்கள் நீங்காத நினைவுகளுடன் வாழும்,

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கரணவாய் தெற்கு.
கரவெட்டி. [8713]

# உதயன்

292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


## ஐ. நா. சபைக்கு ஈழத்தமிழர்

ஈழத் தமிழர்களின் சுய நிர்ணய உரிமையை ஐக்கிய நாடுகள் சபை அங்கீகரிக்க உதவ வேண்டும்.

யாழ்ப்பாணத்து நிலைமையை நேரில் பார்க்க வந்திருந்த ஐ. நா. அபிவிருத்தித் திட்ட ஆலோசகர் திரு. றோலண்ட் ஹட்சனிடம் இங்குள்ள வெகுஜன அமைப்புகளின் பிரதிநிதிகள் இப்படி ஒரு கோரிக்கையை முன் வைத்தனர்.

இதேவேளை—

யாழ்ப்பாணத்தில் தமது நான்கு நாள் விஜயத்தை முடித்துக்கொண்டு கொழும்பு திரும்புவதற்கு முன்னர் உதயனுக்கு அளித்த செவ்வியில்—

தமிழர்களது பிரச்சினையில் ஐக்கிய நாடுகள் சபையின் தலையீடு தேவை என்பதனை எனது அறிக்கையில் சிபாரிசு செய்வேன். அந்த அறிக்கையை கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் அனுப்புவேன்— என்று திரு. ஹட்சன் தெரிவித்திருக்கிறார்.

ஈழத் தமிழர்கள் ஒரு தனியான தேசிய இனத்தினர். அவர்களுக்கென பாரம்பரிய வாழ்விடம் - தாயகம் - ஒன்று உண்டு. அவர்கள் தங்களுக்கெனத் தனியான கலாசாரத்தையும், பண்பாடுகளையும் கொண்டவர்கள். அதனால் அவர்கள் தமது தலைவிதியை தாமே நிர்ணயிக்கவும், தம்மைத் தாமே ஆளவும் வகை செய்யும் சுயநிர்ணய உரிமைக்குத் தகுதி உடையவர்கள்.

திம்புப் பேச்சுவார்த்தை தொடக்கம் தமிழர்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பது தமிழர் தரப்பிலிருந்து வன்மையாக வலியுறுத்தப்பட்டு வருகிறது. ஆனால் சிங்கள அரசுகள் இது விடயத்தில் கண்டும் காணாதது போல, தமக்கு வசதியாகப் புறக்கணித்து விடுகின்றன!

தமிழர்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்காதிருப்பது மட்டுமன்றி, தமிழர்களின் தாயகக் கோட்பாட்டையும் அவை நிராகரித்து வருகின்றன.

சந்திரிகா அரசு இம்மாதம் மூன்றாம் திகதி வெளியிட்ட தீர்வு யோசனையில் கூட தமிழர் தாயகக் கோட்பாடும் சரி, தமிழர்களின் சுயநிர்ணய உரிமையும் சரி குறிப்பிடப்படவில்லை. தமிழர்களுக்கு ஏதோ சில சலுகைகளை வழங்கும் வழமையான பாணியிலேயே அதுவும் அமைந்துள்ளது.

சிங்கள அரசுகள் தமிழர்களின் தாயகத்தையும், சுய நிர்ணய உரிமையையும் அங்கீகரிக்கப் போவதில்லை.

ஆகையால் ஈழத்தமிழர்களின் சுய நிர்ணய உரிமையை ஐக்கிய நாடுகள்சபை போன்ற உலகப் பொது நிறுவனங்கள் அங்கீகரித்து அவர்களை அடக்கு முறையிலிருந்து மீட்க வேண்டிய தவிர்க்க முடியாத தேவை ஒன்று உருவாகியுள்ளது.

பலஸ்தீன மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து ஐக்கிய நாடுகள் சபையில் பார்வையாளர் பிரதிநிதித்துவ அந்தஸ்து வழங்கியது போல, தமிழீழத்துக்கும் வழங்கப்பட வேண்டும்.

திரு. ஹட்சனால், இந்த வழி நாடி மிகச் சிறிய அளவிலேனும் உதவும் சத்தியம் உண்டெனில் அது காலத்தால் செய்த பேருதவியாக அமையும்.

# கிழக்கில் பாரிய தாக்குதல் நடத்த புலிகள் தயாராகி வருவதாக தகவல்

கொழும்பு, ஒக. 30

''பாதுகாப்புப் படைகள் செப்டெம்பர் 15 ஆம் திகதி அளவில் வடக்கில் இன்னொரு பாரிய தாக்குதலுக்கு முழுமூரமாகத் தயாராகின்றனர். விடுதலைப் புலிகள் இதற்கு முன்னர் கிழக்கின் கட்டுப்பாட்டைப் பெற்றுக் கொள்வதை நோக்கமாகக் கொண்டிருக்கிறார்கள்.''

''சண்டே லீடரின் பாதுகாப்புச் செய்தியாளர் எழுதிய கட்டுரையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

கட்டுரை மேலும் கூறுவதாவது:

முன்னர் விடுதலைப் புலிகளின் முகாம்கள் மட்டக்களப்பு மாவட்ட எல்லையிலிருந்து சுமார் 50 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்திருந்தன; இப்பொழுது மட்டக்களப்பு நகரத்திலிருந்து 10 கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கின்றன. விடுதலைப் புலிகளின் முகாம்கள் நகரத்தைச் சுற்றி அமைந்திருக்கின்றன. மட்டக்களப்பைக் கைப்பற்ற விடுதலைப் புலிகள் பாரிய தாக்குதலை நடத்தத் தயாராகிறார்கள் என்று பாதுகாப்பு உளவுப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களின் பாதுகாப்பு நிலைமை மிகவும் பலவீனமாக உள்ளது என்று அங்குள்ள பாதுகாப்பு அதிகாரிகள் மிகவும் கவலைப்படுவதாக நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

இதனால் திருகோணமலையின் சுற்றுப் புறங்களில் உள்ள மீனவ குடும்பங்கள் திருகோணமலை நகரத்துக்குள் தஞ்சம் புகுந்துள்ளன.

திருகோணமலையிலிருந்து 105 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள பள்ளிக்குடியிருப்பில் அமைந்திருந்த ராணுவப் பிரிவு அண்மையில் வாபஸாகியது. விடுதலைப்புலிகள் அந்த இடத்தைக் கைப்பற்றியுள்ளனர்.

இந்த நிலைமையில் மூதூரும் திருகோணமலையின் சுற்றுப்புறங்களும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் வந்துள்ளன.

கிழக்கில் சிவில் நிர்வாகத்தைக் குழப்பியடிப்பது விடுதலைப் புலிகளின் அடுத்த தந்திரோபாயமாக அமையும் என பாதுகாப்பு உளவுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கிழக்கில் விடுதலைப் புலிகளின் பிரதான முகாம் வாகரையில் உள்ளது எனவும் கட்டைபறிச்சான் பாலத்துக்கு அண்மையில் உள்ள பிரதேசம் விடுதலைப் புலிகளின் முழுக் கட்டுப்பாட்டில் உள்ளது எனவும் பாதுகாப்புப் படைகள் கூறுகின்றன.

'இப் பிரதேசத்தில் ஈழக் கொடியைப் பறக்கவிட விடுதலைப் புலிகள் தயாராகிறார்கள்' என்று உளவுப் பிரிவுச் செய்திகள் கூறுகின்றன.

## வீடுகளை சூறையாடும் படையினர்

திருகோணமலை மாவட்டம் கட்டைபறிச்சானில் இருந்து வெளியேறிய இராணுவத்தினர், தாம் முகாம் அமைத்திருந்த வீடுகளில் இருந்த தளபாடங்கள் அனைத்தையும் தம்முடன் கொண்டு சென்றுள்ளனர்.

அதே போன்று முகாம்களுக்கு அருகில் இருந்த வீடுகளிலும் இராணுவம் கொள்ளையடித்துச் சென்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (இ-எ)

## மாணவர்களுக்கு

அளவெட்டி, மல்லாகம் பகுதி பாடசாலைகளை வேறு இடங்களில் இயங்கவைப்பது குறித்து தீர்மானிப்பதற்காக அப்பகுதி பாடசாலைகளில் கல்வி கற்று தற்போது இடம் பெயர்ந்துள்ள மாணவர்களை நாளை வியாழக்கிழமைக்கு முன் யூனியன் கல்லூரியில் சமூகமளித்து தமது விவரங்களைத் தெரிவிக்குமாறு கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ)

## அரசின் தீர்வு யோசனை நாட்டை பிளவுபடுத்தாது

### சந்திரிகா நேற்று வலியுறுத்து

அரசின் அதிகாரப்பரவலாக்கல் யோசனைகள் அடங்கிய தீர்வுத்திட்டம் நாட்டை பிளவுபடுத்தாது என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உறுதிபடக் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் இத்திட்டம் நாட்டை ஒற்றுமைப்படுத்தும் என்று சந்திரிகா குறிப்பிட்டார்.

அஸ்கிரிய, மல்வத்த பீடாதிபதிகள் இந்த யோசனைக்கு எதிர்ப்புத் தெரிவித்த பின்னர் முதல் முறையாக நேற்று ஜனாதிபதி இக்கருத்தை வெளியிட்டார்.

இத்திட்டம் விலக்கிக் கொள்ளப்படமாட்டாது என்று கூறிய அவர், இலங்கைத் தமிழர்களுக்கு உண்மையிலேயே பிரச்சினைகள் உள்ளன. அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க இத்திட்டத்தில் யோசனைகள் உள்ளன என்றும் கூறினார். (ஒ3-)

## வடமராட்சிக் கடலில் கப்பல், படகுகள் 'அணி'!

வெற்றிலைக்கேணியிலிருந்து கடற்படைக் கப்பல் 'வீரயா' முன்னால் செல்ல, அதன் பின்னால் ஆறு டோறாப் படகுகளும், மூன்று இழுவைப் படகுகளும் நேற்றுக் காலை சுமார் 9-45 மணியளவில் காங்கேசன்துறை நோக்கிச் சென்றன.

இந்தக் கப்பல் படகு 'அணி' சென்றதை கடற்கரை ஓரங்களில் நின்று ஏராளமான மக்கள் பார்த்தனர்.

இவற்றில் ஆயுதங்களும், துருப்புகளும் பலாலிக்கு ஏற்றி வரப்பட்டிருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது.

'வீரயா' கப்பல் வல்வெட்டித்துறை, மயிலியதன்னைப் பகுதியூடாகச் சென்றவேளை குடியிருப்புக்களை நோக்கிப் பிரங்கித் தாக்குதல்களை நடத்தியவாறு சென்றது. (அ-155)

## 'வெண்தாமரை' இயக்கம் இளைஞருக்கு ஆயுத பயிற்சி

கொழும்பு, ஒக. 30

அரசாங்கத்தின் 'வெண்தாமரை' இயக்கம் மூலம் தேர்தல் தொகுதிகளில் உள்ள இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கப்படுகிறது.

ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் குழுக் கூட்டத்தில் எம்பிக்கள் பலர் இவ்வாறு கூறியுள்ளதாக அறிய வருகிறது.

அரசாங்கம் இதைப் பயன்படுத்தி பயங்கரவாதத்தில் ஈடுபடலாம் என்றும் தொகுதிகளில் ஐ. தே. க. ஆதரவாளர்களை அச்சுறுத்தலாம் என்றும் அவர்கள் அச்சம் தெரிவித்தார்கள்.

## ஜே. ஆர். மீண்டும் அரசியலுக்கு வருவார்?

கொழும்பு, ஒக. 30

தற்போது அரசியலிலிருந்து ஓய்வுபெற்றுள்ள முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா, ஐ. தே. கட்சியின் ஆலோசகர் என்ற முறையில் மீண்டும் அரசியலில் ஈடுபடலாம் என அவதானிகள் கருதுகின்றனர்.

கட்சியின் குழுக் கூட்டம் ஒன்றில் ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆரின் 89 ஆவது பிறந்த தினத்தை ஒட்டிக் கட்சியின் நாடாளுமன்றக் குழு, அவருக்கு மதிய போசனம் ஒன்றை வழங்க வேண்டும் என்று அறிவித்துள்ளார்.

ரணிலின் இந்த அறிவிப்பு ஜே. ஆர். மீண்டும் அரசியலில் பிரவேசிப்பார் என்பதை சூசகமாகக் காட்டுகிறது என்று கருதப்படுகிறது.

எதிர்வரும் செப்டெம்பர் 17 ஆம் திகதி ஜே. ஆரின் 89 ஆவது பிறந்த நாளாகும். (ஒ-க)

## தாக்குதலை முறியடித்தனராம் 39 பொலீஸாருக்கு பதவி உயர்வு, வெகுமதி

கொழும்பு ஒக 30

மட்டக்களப்புக்கு அருகே உள்ள பிள்ளையாரடி பொலிஸ் நிலையத்தின் மீது கடந்த 17 ஆம் திகதி புலிப் போராளிகள் நடத்திய தாக்குதலை முறியடித்ததுக்காக 39 பொலீஸாருக்கு பதவி உயர்வும் வெகுமதியும் வழங்கப்பட்டிருப்பதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ரிசேவ் சப் இன்ஸ்பெக்ரர் ஒருவருக்கு வெகுமதியாக 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் அவர் இன்ஸ்பெக்டராக நிரந்தர சேவைக்கு பதவி உயர்த்தப்பட்டார்.

மற்றும் றிசேவ் பொலிஸார் 38 பேருக்கும் தலா 20 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் நிரந்தர கான்ஸ்டபிள்களாகப் பதவி உயர்த்தப்பட்டனர்.

புலிகள் பாரிய அளவில் நடத்திய தாக்குதல் ஒன்றை முறியடித்ததுக்காக இந்தப் பதவி உயர்வுகளும், சன்மானமும் வழங்கப்பட்டதாக பொலிஸ் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார் என அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## 20 படையினருடன்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டோறா படகுகளில் ஒன்றே முல்லைதீவுக் கரையோரத்தில் இருந்து சுமார் ஏழு மைல் தொலைவில் முதலில் கடற்புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகிச் சிதறியது.

இத்தாக்குதலை அடுத்து அந்தப் படகில் சென்ற பன்னிரண்டு படையினர் காணாமல் போயினர்.

இந்த டோறா படகைத் தேடிச்சென்ற மற்றைய டோறா படகும் பின்னர் காணாமல் போனதாக கடற்படை வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்தன.

இப்படகும் புலிகளின் கண்ணியில் சிக்கிச் சிதறியிருக்கலாம். அல்லது அதில் சென்ற எட்டுப் படையினருடன் புலிகளின் கைகளில் சிக்கியிருக்கலாம் எனக் கருதப் படுவதாக செய்தி ஏஜென்ஸிகள்கொழும்பில் தெரிவித்தன.

இதற்கிடையில் —

முல்லைத் தீவில் பாதுகாப்பு படைகள் வான், கடல், தரை மார்க்கங்களாக நேற்றுப் பிற்பகல் தாக்குதல் மேற்கொண்டதாகவும் —

முல்லைத்தீவுக் கரையோரப் பகுதியில் இருந்த புலிகளின் விமான எதிர்ப்பு ஏவுகணை நிலைகள் இரண்டை அழித்ததாகவும் —

அரசுத் தரப்பில் நேற்று மாலையில் அறிவிக்கப்பட்டது.

கடற்படை ரோந்துப் படகுகளுக்கும், சரக்குக் கப்பலுக்கும் பாதுகாப்பு வழங்குவதற்கு என விமானப் படை விமானங்கள் அழைக்கப்பட்டதாகவும் அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் அதற்குப் பின்னர் இரண்டு டோறா படகுகளை அரச கடற்படை இழந்தது பற்றிய அறிவிப்பு நேற்று நள்ளிரவுக்கு சற்று முன்னர் செய்தி ஏஜென்ஸிகளால் வெளியிடப்பட்டன.

### பிந்திய செய்தி

இதற்கிடையில் —

நேற்று முன்தினம் திருமலையில் இருந்து 120 பயணிகளுடன் தீவுப் பகுதியை நோக்கிப் புறப்பட்டு வந்த ''ஐரிஸ் மோனா'' என்ற கப்பல் நடுக்கடலில் வைத்து கடத்தப்பட்டு விட்டதாக நேற்று நள்ளிரவுக்குப் பின்னர் பி. பி. ஸி அறிவித்தது. (உ-8-6)

## காயமுற்ற....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்பட்டது.

இச்சம்பவங்களில் பலியான பொலீஸார் சிலரின் பெயர்கள் வருமாறு:- ஏ. கே ஜி. திஸ்ஸ, டபிள்யூ. எம். கபிலரத்ன, உதயகுமார கருணாதாஸ, லக்ஷ்மன், அனுரஎக்க நாயக்க, துரைராஜா, ரட்ணசிறி, சின்னத்தம்பி, யோகநாதன், சரத் லியதிபிட்டிய, சுந்தரலிங்கம், சிறிவர்த்தன, அப்துல்காதர். (ஒ-3)

## கிழக்கில்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உத்தியில் விடுதலைப் புலிகள் ஈடுபடக்கூடும் என இராணுவ ஆய்வாளர்கள் முன் மதிப்பீடு செய்துள்ளனர்.

— இவ்வாறு செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டன. [உ-3-6]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராமாசி கணபதிப்பிள்ளை

(நயினாதீவு)

நயினாதீவு 7 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி இராமாசி கணபதிப்பிள்ளை அவர்கள் நயினாதீவில் காலமானார்.

அன்னார் கணபதிப்பிள்ளையின் அன்புக் கணவரும், பத்மநாதன் (பிரதேச செயலகம் உடுவில்), சுப்பையா (எஸ். வி. எம். கிளிநொச்சி), விமலாதேவி ஆகியோரின் அருமைத் தாயாரும், பரிமளம் (ஆசிரியை இராமநாதன் கல்லூரி), பரமேஸ்வரி திருவாசகநாதர் (ஆசிரியர் - இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (27 - 8 - 1995] ஞாயிற்றுக்கிழமை நயினாதீவில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. பத்மநாதன்

அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு. [38271)

## கனகசபை வேலுப்பிள்ளை

(இளைப்பாறிய தபாலதிபர்)

சிறுப்பிட்டி மத்தியைச் சேர்ந்த கனகசபை வேலுப்பிள்ளை 26 - 08 - 95 இல் கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ் சென்ற செங்கமலத்தின் அன்புக் கணவரும், திருமதி மங்கையர்க்கரசி, திருமதி சரோஜா (U.K), திருமதி கலாதேவி (Canada), திரு. நித்தியானந்தராசா (U K), காலஞ்சென்ற திரு. சிறீஸ்கந்தராசா ஆகியோரின் அன்புத் தந்தையும் திரு. சந்திரசேகரம் (Canada], திரு. மனோகரன் (U K), திரு. ரட்ணசிங்கம் (Canada), திருமதி நித்தியானந்தராசா (U.K) ஆகியோரின் மாமனாரும் திரு. கனகநாயகம் (பப்பன் - Swiss), திரு. கனகலிங்கம் (சாமி), காலஞ்சென்ற கனகசுந்தரம் (பொந்தப்பா), திருமதி உ. கமலாதேவி ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்கும் படி கேட்டுக்கொள்கிறோம்.

தகனக் கிரியைகள் 28 - 08 - 1995 காலை கொழும்பில் இடம்பெற்றன.

தகவல்:
பொ. கனகலிங்கம் (சாமி)

முருகன் ஸ்ரோர்ஸ்,
சிறுப்பிட்டி. (38227)

## வேலன் சரவணமுத்து

ஆலடி வீதி, கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த யாழ். மாநகரசபை மின்சாரப் பகுதி காவலாளியும், ஓய்வூதியருமான வேலன் சரவணமுத்து அவர்கள் காலமாகிவிட்டார்.

இவர் இராசம்மா அவர்களின் அன்புக் கணவரும் லோகேஸ்வரன் (யா/ மாநகரசபை மின்சாரப்பகுதி), பரமேஸ்வரன், சர்வேஸ்வரன், தங்கேஸ்வரன், பகீஸ்வரன், அன்னபூரணம், பரிபூரணம் ஆகியோரின் அன்புத் தந்தையும் தங்கராசா, நடராசா, சந்திரகலா, கேசவராணி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

இவரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று புதன்கிழமை (30- 08- 95) 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இருந்து கொட்டைக்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. லோகேஸ்வரன்
(மகன்)

ஆலடி வீதி,
கோண்டாவில் கிழக்கு. (38286)

## திருமதி அநுசூயா சரவணபவா

திருமதி அநுசூயா சரவணபவா நேற்றுச் சிவபதம் அடைந்துவிட்டார்.

இவர் சரவணபவாவின் [பிரதம எழுதுநர், சாவகச்சேரி நகர சபை] அன்பு மனைவியும், திரு. திருமதி வேலுப்பிள்ளை- இராசையா அவர்களின் புதல்வியும், சிக்கம் முருகுப்பிள்ளை செல்லையா தம்பதிகளின் மருமகளும், இராகுலன், அம்பிகா, அருணியா ஆகியோரின் அன்புத் தாயாரும், மீனா, கௌரி [ஆசிரியை, உசன் இராமநாதன் ம. வி.], காயத்திரி [ஆசிரியை, மீசாலை வீரசிங்கம் ம. வி], ஞானகுரு ஆகியோரின் அன்புச் சகோதரியும், செ. திகனொளிபவன், தவராசா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (30-8-95) பிற்பகல் இரண்டு மணிக்கு சாவகச்சேரி பொலீஸ் நிலைய வீதி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காகக் கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ. சரவணபவா
(கணவர்)

பொலீஸ் நிலைய வீதி,
சாவகச்சேரி [38293]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் தாவளர் வீதி, 392/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 30 - 08 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## ஆலயங்களில்

கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று புதன்கிழமை நண்பகல் 12 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. எதிர்வரும் 7 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 8]ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (ச)

## 3 கப்பல்கள் வடபகுதிக்கு செல்ல அனுமதி

யாழ்ப்பாணம், ஓக. 30

வடக்கே வரும் கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்க செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு இணக்கம் தெரிவித்ததையடுத்து—

வடக்கே உணவுப் பொருள்களை ஏற்றிச்செல்ல மூன்று கப்பல்களுக்கு பாதுகாப்பு அமைச்சு நேற்று அனுமதி வழங்கியது.

கொழும்புத் துறைமுகத்தில் பொருள்களுடன் தரித்து நிற்கும் "லங்கா கல்யாணி" "மாஹோ" ஆகிய இரு கப்பல்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும் இக்கப்பல்கள் நேற்று மாலை வரை வடக்கு நோக்கிப் புறப்படவில்லை என்று நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் தெரிவிக்கப்பட்டது.

இது தவிர "ஹெந்தல" கப்பல் கொழும்பில் இருந்து புறப்பட்டு திருகோணமலைக்குச் சென்று மாவை ஏற்றிக்கொண்டு வடக்கே செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## ஸ்ரீலங்கா படை சூட்டுக்கு இந்திய மீனவர் காயம்

சென்னை, ஓக. 30

புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப் பட்டனம் கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இரு மீனவர்கள் மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் நேற்று முன்தினம் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதில் ஒரு மீனவர் காயமடைந்தார்.

இவர் புதுக்கோட்டை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-3)

## பலாலி படையினர் ஷெல் வீச்சு

அச்சுவேலி, ஓக. 30

பலாலி முகாமில் இருந்து நேற்று அதிகாலை 2 மணிக்கு ஆரம்பமான ஷெல் தாக்குதல் காலை 7 மணிவரை தொடர்ந்தது. குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்ட அதேவேளை முகாமை அண்டிய பகுதிகளில் இருந்து சரமாரியான வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன.

ஈவினை, புன்னாலைக்கட்டுவன், அச்செழு, நவக்கிரி, நீர்வேலி வடக்கு பகுதிகளில் பெரும்பாலான ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன.

இதனால் குடியிருப்புக்கள் பல சேதமடைந்தன. பயன் தரும் மரங்கள் மற்றும் விளை பயிர்கள் நாசமாகின.

இப்பகுதிகளில் இருந்து பெருமளவு மக்கள் இடம் பெயர்ந்து சென்றுள்ளதால், உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டன.

இதேவேளை நேற்றுக் காலை ஆவரங்கால் பகுதியில் நடந்த மோதலைத் தொடர்ந்து மல்லாகம், சுன்னாகம், மயிலணி, ஏழாலை வடக்குப் பகுதிகளை நோக்கியும் பலாலியில் இருந்து தாக்குதல் நடத்தப்பட்டது. (ஒ-15-11-13)

## மின்மாற்றியைத் தகர்க்க முயற்சி

கொழும்பு, ஓக. 30

ஏறாவூர் வவுனியடிச் சந்தியில் உள்ள மின்மாற்றியை [ட்ரான்ஸ் போமரை] நேற்று முன்தினம் இரவு, இனம் தெரியாதோர் குண்டெறிந்து தகர்க்க முயன்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆரம்பமாகிவிட்டது

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்

"வேரும் விழுதுகளும்"

கல்வியியற் கண்காட்சி

இடம்: நுணாவில் கண்ணகை அம்மன் கோவிலடி

நிகழ்வு நேரம்;
காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகிறது.
உள் அனுமதிக்கப்படும் இறுதி நேரம் மாலை 5-30 மணி

எங்களைத்தேடி.....செல்வோமா?

— செஞ்சோலை மகளிர் வித்தியாலயம்.

(38253)

# நல்லடக்க ஆராதனை

## வைத்திலிங்கம் சுந்தரமூர்த்தி

(ஓய்வுபெற்ற இ. போ. ச ஊழியர்)

கிறிஸ்து இயேசுவின் அன்புக்குப் பாத்திரமான எமது தகப்பனார் 28 - 8 - 95 இல் இவ்வுலக வாழ்வை முடித்துக் கொண்டு நித்தியவீடு சென்றுவிட்டார்.

இவரது நல்லடக்க ஆராதனை இன்று [30-8-95] புதன்கிழமை மாலை 3.00 மணிக்கு யாழ் / கச்சேரி நல்லூர் வீதியிலுள்ள 130 ஆம் இலக்க இல்லத்தில் நடைபெறும் என்பதை தேவஊழியர்கள், விசுவாசிகள், உறவினர் நண்பர்கள் யாவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
சகோ. எஸ். மகேசன் — சகோதரர்கள்
"இயேசு பேசுகிறார்" மணியகம்
130, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். [38288]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இமல்டா சேவியர்

குருநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி இமல்டா சேவியர் 28 - 08 - 95 அன்று காலை 10.00 மணியளவில் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சந்தியோ சின்னப்பு, அக்னஸ் அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்ற சேவியர் குலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், லுவிசா, யேக்கப், யோண் ஆகியோரின் சகோதரியும், மரியராணி, மக்சிமலா, அருட்சகோதரிகள் கௌற், மேரி [திருச்சிலுவைக் கன்னியர்மடம்], வண. பிதா பேணாட் றெஞ்ஜோ [பங்குத் தந்தை, நாவாந்துறை], காலம் சென்ற களிசியஸ், மற்றும் அன்று. கிலிடிக்காட் அவர்களின் அன்புத் தாயும், M. S. மரியதாசனின் அன்பு மாமியும், பமிலா, சந்திரசேகர், விஜயசேகர், சுதாகர், ஷகிலா அவர்களின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை வியாழன் [31 - 08 - 95] காலை 7.30 மணிக்கு இலக்கம் 10 A. V. R. வீதி கொழும்புத்துறையிலுள்ள எமது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலியின் பின்பு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இதை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வண. பிதா பேணாட் றெஞ்ஜோ

[38294]

அருட்செல்வி

## பிறிஸ்கா சந்தியாப்பிள்ளை

யாழ்ப்பாணம் குருநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் திருக்குடும்பச் சபையைச் சேர்ந்தவருமான அருட்செல்வி பிறிஸ்கா சந்தியாப்பிள்ளை 27 - 08 - 95 கொழும்பில் காலமானார்.

பூதவுடல் அஞ்சலிக்காக 121, பிரதான வீதியில் அமைந்துள்ள திருக்குடும்ப மாகாண சபை இல்லத்தில் வைக்கப்பட்டு இன்று (30 - 8 - 95) புதன்கிழமை காலை 8 மணிக்கு நல்லடக்கத்திற்காக யாழ். புனித மரியாள் பேராலயத்தில் இரங்கற்பலி விருந்துடன் கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
திருக்குடும்ப மாகாணத் தலைவியும்,
குடும்ப அங்கத்தினரும்

(38291)